சிவகங்கை மாவட்டம் நகரம் பட்டியில் வழக்கறிஞர் கலைமணி எழுதிய சுதந்திர போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் நூலினை முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வெளியிட்டார். இதில் முன்னாள் அமைச்சர் திருமதி தமிழரசி ரவிக்குமார், வாளுக்கு வேலி அம்பலம் வாரிசுதாரர் செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ராஷ்டீரிய ஜனதா தள தலைவர்

லல்லு பிரசாத் யாதவ் பிறந்த நாள்!

எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூன்.12- ராஷ்டீரிய ஜனதா தளத்தின் தேதியத் தலைவர் லல்லு பிரசாத் யாதவ் அவர்களின் பிறந்த நாளையொட்டி, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.

அதில், “ஆர்.ஜே.டி. தேசியத் தலைவரான நீங்கள், மதச்சார்பின்மை, சமூக நீதி மற்றும் கூட்டாட்சித் தத்துவங்களை நிலை நிறுத்தி இந்தியாவிற்கு தொடர்ந்து வழிகாட்டுவதோடு, இனி வரும் ஆண்டுகளில் நல்ல உடல் நலத்துடன் அமைதியான முறையில் வாழ வாழ்த்துகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

கழக மகளிர் அணி - மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டம்!

கனிமொழி கருணாநிதி எம்.பி, தலைமை! ஹெலன் டேவிட்சன் – நாமக்கல் ராணி அறிக்கை!

சென்னை, ஜூன். 12- நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளை முன்னிட்டு கழகத்துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் தலைமையில் தி.மு.க. மாநில, மாவட்ட, மாநகர மகளிரணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது என கழக மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப. இராணி ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

தி.மு.க.வின் வெல்லும் தமிழ் பெண்கள் திராவிட மாடல் அரசின் தேர்தல் வெற்றிக்காக தமிழ்நாட்டின் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் சிறப்பாக பணியாற்றி இருந்த நிலையில் கடந்த 5 ஆண்டுகளில் எல்லோருக்கும் எல்லாம் என சாதனைகள் படைத்த நம் திராவிட மாடல் அரசு எப்படி வெற்றி வாய்ப்பை இழந்தது என்று அத்தனைப்பேருக்கும் அதிர்ச்சியும், வேதனையும்ஏற்படுத்தியுள்ளது.

இதிலிருந்து மீண்டு நம்மை பலப்படுத்திக் கொள்ளவும், பல வெற்றி தோல்விகளைக் கண்ட நம் கழகத் தலைவர் நம்மோடு இருக்கிறார் .மீண்டு எழுவோம்!சரித்திரம் படைப்போம் !

நடத்து முடிந்த தேர்தல் முடிவுகளை முன்னிட்டு ஆலோசனைக் கூட்டம் நாளை (13/06/2026 சனிக்கிழமை) காலை 10 மணிக்கு கலைஞர் அரங்கம், சென்னையில் கழகத் துணைப்பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் தலைமையில் நடைபெற இருக்கிறது.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்கள்.

தி.மு.க. மாநில, மாவட்ட, மாநகர மகளிரணி மகளிர் தொண்டரணி, தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், வலைதள நிர்வாகிகள் அனைவரும் ஆலேசனைக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

இவ்வாறு மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ப. இராணி ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கோவையில் பரபரப்பு

ரூ.50 லட்சம் கேட்டு 2 வாலிபர்களை கடத்தி கொலை மிரட்டல்!

திருப்பூர் - நல்லூர் காவலர்கள் உட்பட 4 பேர் கைது!

திருப்பூர், ஜூன். 12– ரூ.50 லட்சம் கேட்டு 2 வாலிபர்களை கடத்தி கொலை மிரட்டல் விடுத்ததாக திருப்பூர் நல்லூர் காவலர்கள் உட்பட 4 பேரை காவல்துறையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோவை போத்தனூர் அடுத்த சீத்தனபுரம், இந்திரா நகரைச் சேர்ந்தவர் பரமேஸ்வரி (31). இவரது தம்பி நவீன் (29) இவர் வெள்ளலூர் ஹவுசிங் யூனிட் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் தங்கிருந்து ஆன்லைன் டிரேடிங் வேலை செய்து வந்தார்.

கடந்த 8ம் தேதி மதியம், பரமேஸ்வரியின் செல்போனுக்கு ஒரு அழைப்பு வந்தது. அதில் பேசிய மர்மநபர், ”உன் தம்பி நவீனை நாங்கள் கடத்தி வைத்துள்ளோம். அவர் உயிரோடு வேண்டும் என்றால் உடனடியாக ரூ.50 லட்சம் பணம் தர வேண்டும் என்று கூறிவிட்டு இணைப்பை துண்டித்துள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த பரமேஸ்வரி, பதறியடித்துக் கொண்டு தம்பியின் வீட்டிற்குச் சென்று பார்த்தார். அப்போது வீடு பூட்டப்பட்டிருந்தது, பல்வேறு இடங்களில் தேடி பார்த்தும் கிடைக்க வில்லை.

செல்போனில் தொடர்பு கொண்ட போது சுவிட்ச் ஆப் செய்யப்பட்டிருந்தது. இதற்கிடையே நவீனின் நண்பர் நிர்மல்குமார் (29) என்பவரின் மனைவி ஜெனிதா, பரமேஸ்வரியைத் தொடர்பு கொண்டு மதியம் 12 மணி முதல் தன் கணவரையும் காணவில்லை என தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அன்று இரவு ஜெனிதாவின் செல் போனுக்கு நவீனின் எண்ணில் இருந்து ஒரு அழைப்பு வந்துள்ளது. அதில் பேசிய கடத்தல்காரர்கள், ”நவீன் மற்றும் நிர்மல்குமார் ஆகிய இருவரையும் நாங்கள் தான் கடத்தியுள்ளோம். கேட்கும் பணத்தைக் கொடுக்காவிட்டால் இருவரையும் கொலை செய்து விடுவோம் என மிரட்டியுள்ளனர்.

இதனால், பயந்து போன குடும்பத்தினர் உடனடியாக போத்தனூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன்பேரில் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்தனர். இதையடுத்து காவல்துறையினர் அவர்கள் இருவரும் பணம் கொடுக்கல், வாங்கல் தகராறில் கடத்தப்பட்டார்களா? அல்லது திட்டமிட்டு பணம் பறிக்கும் கும்பல் இதில் ஈடுபட்டுள்ளதா? என்று பல்வேறு கோணங்களில் தனிப்படை அமைத்து தீவிரமாக விசாரித்து வந்தனர்.

காவல் துறையினர் மடக்கிப் பிடித்தனர்!

தொடர்ந்து காவல்துறையினர் மர்ம நபர்கள் அழைத்த செல்போன் எண் மற்றும் சிசிடிவி காட்சிகளை வைத்து தேடி வந்தனர். இதற்கிடையே காவல்துறையினர் பணத்தை தயார் செய்து நவீன் மற்றும் நிர்மல்குமாரின் குடும்பத்தினரிடம் கொடுத்து கடத்தல்காரர்களிடம் எங்கு வர வேண்டும் என கேட்குமாறு கூறியுள்ளனர்.

கடத்தல் காரர்கள் திருப்பூர் வந்து பணத்தை கொடுத்து இருவரையும் மீட்டு செல்லும் படி தெரிவித்துள்ளனர். இதையடுத்து இருவரது குடும்பத்தினரும் திருப்பூர் சென்றனர். அவர்களை காவல்துறையினர் சாதாரண உடையில் பின் தொடர்ந்தனர். அப்போது, பணத்தை வாங்க வந்த இருவரை போத்தனூர் காவல் துறையினர் மடக்கிப் பிடித்தனர்.

அதில் அவர்கள் இருவரும் திருப்பூர் நல்லூர் காவல் நிலையத்தில் காவலர்களாக பணிபுரிந்து வரும் மோகன் (37) மற்றும் ஆனந்த் (38) என்பது தெரியவந்தது. காவல்துறையினர் அவர்களை கோவை அழைத்து வந்து விசாரணை நடத்தியதில் நவீன் மற்றும் நிர்மல்குமார் ஆகியோரை திருப்பூரை சேர்ந்த காளிதாஸ் (31) மற்றும் ராம்குமார் (31) ஆகியோர் திருப்பூரில் ஒரு பகுதியில் அறையில் மறைத்து வைத்திருப்பதாக கூறியுள்ளனர். காவல்துறையினர் அதிரடியாக அங்கு சென்று இருவரையும் மீட்டு, கடத்தல்காரர்கள் காளிதாஸ் மற்றும் ராம்குமாரையும் பிடித்தனர். அவர்களை காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை நடத்தினர். விசாரணையில், அவர்கள் பணம் கொடுக்கல், வாங்கல் தகராறில் இருவரையும் கடத்தியதாகவும், தங்களுக்கு திருப்பூர் காவலர்கள் இருவரும் உதவியதாகவும் தெரிவித்துள்ளனர். இதைத்தொடர்ந்து காவலர்கள் மோகன், ஆனந்த் மற்றும் காளிதாஸ், ராம்குமார் ஆகிய 4 பேரை கைது செய்து கடத்தலுக்கு வேறுயாரெல்லாம் உதவி உள்ளார்கள்? திருப்பூர் காவலர்களுக்கு கடத்தலில் என்ன தொடர்பு என்பது குறித்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த கடத்தப்பட்ட சம்பவம் கோவையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆன்லைன் லாட்டரி விற்பனை!

கடத்தப்பட்ட நவீன் மற்றும் நிர்மல்குமார் பல்வேறு ஆன்லைன் வேலைகளை செய்து வந்துள்ளனர். அதேபோல தடை செய்யப் பட்ட ஆன்லைன் லாட்டரி விற்பனையிலும் ஈடுபட்டு வந்ததாக தெரிகிறது. அதில் மோசடியில் ஈடுபட்டதால் அவர்கள் கடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதனால் காவல்துறையினர் நவீன் மற்றும் நிர்மல்குமாரிடம் விசாரணை நடத்தி உள்ளனர். இதில் அவர்கள் ஆன்லைன் லாட்டரி விற்பனை செய்தது உறுதி செய்யப்பட்டதாக தெரிகிறது. இதனால் காவல்துறையினர் அவர்கள் மீதும் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்த திட்டமிட்டு உள்ளனர்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு

10-ஆம் வகுப்பு கூட படிக்காதவர்கள் அறிவுரை வழங்குவதா?

விக்கிரவாண்டியில் த.வெ.க.வினர் அடாவடி!

விக்கிரவாண்டி,ஜூன்.12- விழுப்புரம் மாவட்டம், மாம்பழப்பட்டில் அரசு மேல்நிலைப்பள்ளியில் நேற்று முன்தினம், தவெக காணை ஒன்றிய செயலாளரான ஜான்பீட்டர் உள்பட 10க்கும் மேற்பட்டோர் ஆய்வுக்கு செல்வதுபோல் சென்றுள்ளனர்.

அங்கு, தலைமை ஆசிரியர் அறைக்குச் சென்று, ‘பள்ளி எவ்வாறு செயல்படுகிறது?, மாணவர்கள் எவ்வாறு படிக்கின்றனர்? என பல கேள்வி எழுப்பி விளக்கம் கேட்டுள்ளனர். இதனிடையே நடிகர் விஜயின் கட்சி துண்டுடன் தவெக வினர் நுழைந்ததை கண்ட, மாணவர்கள் விசில் அடித்து ஆரவாரத்தில் ஈடுபட, ஒரு வகுப்பறைக்குள் மாணவர்களுக்கு பாடம் எடுத்தும் சில அறிவுரைகளை த.வெ.க,வினர் கூறவே ஆசிரியர்கள், ஊழியர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

அரசு அதிகாரிகளே இது போன்று நடந்து கொள்ளாதபோது, 10ம் வகுப்பே சரவர முடிக்காத த.வெ.க. ஒன்றிய செயலாளர் உள்ளிட்டோர் மாணவர்களுக்கு அறிவுரை கூறி, ஆசிரியர்களிடம் கேள்வி கேட்டதோடு அதை தங்களது செல்போனில்வீடியோ எடுத்து ரீல்ஸ் வெளியிட்டது சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாகும் நிலையில், பொதுமக்கள், ஆசிரியர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். இதை தவெக நிர்வாகிகள் தங்களது முகநூல் பக்கத்தில் பதிவேற்றம் செய்துள்ள நிலையில், மாவட்ட கல்வித்துறை அதிகாரிகள் பள்ளி நிர்வாகத்திடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி தொப்பம்பட்டி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட அப்பனுத்து, புங்கமுத்தூர் மேட்டுப்பட்டி, வேலம்பட்டி வாகரை உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்து 7வது முறையாக வாக்களித்து வெற்றி பெறச் செய்த வாக்காளர்களுக்கு அர. சக்கரபாணி எம்.எல்.ஏ. நன்றி தெரிவித்து பேசினார் இந்நிகழ்வில் மாவட்ட துணைச் செயலாளர் ராஜாமணி, ஒன்றிய செயலாளர் தங்கம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கலைச்செல்வி இராசு, பெரியநாயகி மகேஷ்,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்தராஜ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் தினேஷ்,ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் செல்வகுமார் உள்ளிட்ட நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அண்ணா கிராமம் ஒன்றியம் எழுமேடு கிளைக் கழகம் சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞரின் 103 வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

க,பொன்முடி – சி,வெ,கணேசன் சிறப்புரை! தலைமை; என், பலராமன்! வரவேற்புரை; வி,கே, வெங்கட்ராமன்!

கடலூர் ஜூன் 12 - முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டம் அண்ணா கிராமம் ஒன்றியம் எழுமேடு கிளைக் கழகம் சார்பில் பொதுக்கூட்டம் நாளை (13.6.2026 - சனிக்கிழமை) மாலை 5 மணி அளவில் எழுமேடு அண்ணா திடலில் நடைபெறுகிறது.

இப்பொதுக்கூட்டத்திற்கு தலைமை பொதுக்குழு உறுப்பினர் என். பலராமன் தலைமை வகிக்கிறார்

அண்ணா கிராமம் ஒன்றிய கழக செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் வி. கே. வெங்கட்ராமன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் க. பொன்முடி, கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

என்.ராமு, எஸ். குமார், டி. சதாசிவம், கே.எம். தண்டபாணி, ஜி. சதாசிவம், கவிராஜ், கே. குமார், எஸ். கருணாகரன், கார்த்திக், திருநாவுக்கரசு, ஜெகதீசன், சம்பத், சுபாஷ், ஆதிநாராயணன், உத்திராபதி, கன்னியப்பன், என்.ராஜி, அழகிய மணவாளன், பார்த்திபன், ராமகிருஷ்ணன், ஜெயக்குமார், நந்தகோபால், பாலாஜி, பத்மினி, பலராமன், கலியவரதன், காமேஷ், குமுதவல்லி, தண்டபாணி, புருஷோத்தமன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மேலும் மாவட்ட கழக அவைத்தலைவர் கே.நந்தகோபாலகிருஷ்ணன், நெய்வேலி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன், வி.சி.சண்முகம், கே.ராஜேந்திரன், ஆர்.எஸ்.எம். தணிகைசெல்வம், ஆனந்தி, சரவணன், பி.மணிவண்ணன், ஆர் ராதா கிருஷ்ணன், கே. ராமு(எ) ராமச்சந்திரன், ஆர்.சந்தோஷ் குமார், வி. ஜெயமூர்த்தி, குணா, ஆர் சுந்தர வடிவேல், ஏ.சிவா, எம்.எஸ்.கணேஷ் குமார், ஏ.மதன குரு, எஸ். துரைராஜ், சடாச்சரம் டாக்டர். விஜய்சந்திரன், கலியமூர்த்தி, எஸ்.சதாசிவம், ஹைதர்அலி, கதிர்காமன், தென்னரசு, எம். எஸ்.ராம்குமார், எழில்செல்வம், ஆர்.கே.ராகவன், வி.பி. ராதாகிருஷ்ணன், கோவிலூர் ரஹ்மான், குமார், பழனிவேல், வாசுகி, அமுதா, பரணிசந்தர், சங்கர், ம.த. ஏசுதாஸ், நாராயணன், முரளி, முத்துசாமி, வா.சிவனேசன், பாலச்சந்தர், குணாளன், ராஜசேகர், ஜெ. செந்தில், டி. ஜெயமூர்த்தி, ஓ.பி.டி. தியாகராஜன், ஆறு என்ற கண்ணதாசன், எஸ் செந்தில்நாதன், டி.ஞானவேல், எஸ். இளங்கோவன், கிருஷ்ணராஜ், கருணாநிதி, வேணுகோபால், வெங்கடாஜலபதி,ஆர்.எஸ் அருள், குமரகுருதாஸ், வேல்முருகன், சித்ரா ராஜ்குமார், விஜயலட்சுமி, சாய்பிரசாத், ரவீந்திரன், வேலு, நெப்போலியன் மற்றும் மாவட்டக் கழக ஒன்றிய கழக நகர கழக பேரூர் கழக கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தொ.மு.ச. நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்கின்றனர்.

எழுமேடு எம். திருமலை நன்றியுரை ஆற்றுகிறார்.

பாகனேரி அருகே நகரம்பட்டியில்

சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் பிறந்த நாள்!

கே.ஆர்.பெரியகருப்பன் – தி.மு.க.வினர் மரியாதை!

சிவகங்கை ஜூ.ன் 12.

சிவகங்கை மாவட்டம் பாகனேரி அருகே உள்ள நகரம் பட்டிகிராமத்தைச் சேர்ந்தவர் வாளுக்கு வேலி அம்பலம். இவர் ஆங்கிலேயர்கள் மாமன்னர் மருதுபாண்டியர் களை திருப்பத்தூரில் தூக்கிலிட உள்ளதாக தகவல் கிடைத்ததும் அவர்களை காப்பாற்றுவதற்காக படைகளுடன் சென்ற பொழுது கத்தப்பட்டு என்ற கிராமத்தில் ஆங்கிலேயர்களால் சுற்றி வளைக்க பட்டு வீர மரணம் அடைந்தார்.

வாளுக்கு வேலி அம்பலம் மரணம் அடையவில்லை என்றால் மாமன்னர் மருதுபாண்டியர்களை தூக்கிலிடப்படுவதி லிருந்து காப்பாற்றி இருப்பார் என்று கூறப்படுகிறது.

அத்தகைய சுதந்திரப் போராட்ட வீரரின் தியாகத்தை போற்றும் வகையில் எதிர் கால சந்ததியினர் வாளுக்கு வேலி அம்பலம் வரலாறை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் நகரம் பட்டிகிராமம் மற்றும் சுற்றுப்புற கிராமமக்கள் சார்பில் அ.தி.மு.க. அரசிடம் நீண்ட நாட்களாக கோரிக்கை வைக்கப்பட்டது.

அப்போது இந்த கோரிக்கை நிறைவேற்றப்பட வில்லை. கடந்த தி.மு.க. ஆட்சியில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பனிடம் நகரம் பட்டிகிராமமக்கள் வாளுக்கு வேலி அம்பலம் சுதந்திர போராட்டத்தில் மாமன்னர் மருதுபாண்டியர் களை காப்பாற்ற உயிர் நீத்த தியாகத்தை எடுத்து கூறி நகரம் பட்டியில்சிலை அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்தார்கள்.

அவர்களது கோரிக்கையை தமிழக முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலினிடம் எடுத்து கூறி உரிய நடவடிக்கை எடுப்பதாக அப்போதைய அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நகரம் பட்டிகிராமமக்களிடம் உறுதி அளித்தார்.

முதல்வரிடம் நகரம் பட்டிகிராம மக்களின் கோரிக்கையினை விளக்கி கூறினார். சிறுகதை மன்னர் எஸ்.எஸ்.தென்னரசு எழுதிய செம்மாதுளை நூலில் கழகத் தலைவர் கலைஞர் தென்பாண்டி சிங்கம் நூலில் வாளுக்கு வேலி அம்பலம் குறித்து எழுதி உள்ளதை விளக்கி கூறினார். வாளுக்கு வேலி அம்பலத்தின் வரலாற்றினை அறிந்த முதல்வர் ஸ்டாலின் ரூபாய் 50 லட்சம் செலவில் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி நகரம் பட்டியில் வாளுக்கு வேலி அம்பலம் சிலை அமைவதற்கான ஏற்பாடுகளை அப்போதைய அமைச்சர் சாமிநாதன் முயற்சியால் வாளுக்கு வேலி அம்பலம் சிலை அமைக்கப்பட்டு முதல்வர் மு.க.ஸ்டாலினால் திறந்து வைக்கப்பட்டது . அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் சூன் மாதம் 10ம்தேதி வாளுக்கு வேலி அம்பலம் பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி நேற்று முன்தினம் சூன் 10ஆம் தேதி வாளுக்கு வேலி அம்பலம் பிறந்த நாளை முன்னிட்டு நகரம் பட்டியில் உள்ள வாளுக்கு வேலி அம்பலம் சிலைக்கு முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் .

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் திருமதி தமிழரசி ரவிக்குமார், மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், முன்னாள் எம்.எல்.ஏ எஸ்.மாரியப்பன் கென்னடி,பொதுக்குழு உறுப்பினர்ஜெ. மதார் சேட், அம்பலமுத்து, ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆர்.எம். கென்னடி,யோக. கிருஷ்ணகுமார், திருமலை முத்துராமலிங்கம், எம். அண்ணாதுரை, துரை.ராஜா மணி, லெ.மு. ரவிச்சந்திரன், விராமதி மாணிக்கம், பூமணி, கே.பாலசுப்பிரமணியன், நா.நெடுஞ்செழியன் குன்னக்குடி சுப்பிரமணியன், கா. வெங்கட்ராமன்,அ.முத்துச்சாமி, பேரூர் கழகச் செயலாளர்கள் கதிர்வேல், நாகூர் கனி , காரைக்குடி மாநகர செயலாளர் துணை மேயர்நா.குணசேகரன்,

மானாமதுரை நகர் கழகச் செயலாளர் க.பொன்னுச்சாமி, மாவட்ட சுற்றுச்சூழல்அணி அமைப்பாளர் எஸ். எஸ் .ஏ.வல்லபாய் , மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி . ராஜ்குமார் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் ,பத்மா தகவல் தொழில் நுட்ப அணி காளிமுத்து, மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப் கான்,அயலக அனி சன் சீமான் சுப்பையா, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ்.பாஸ்கரன், ஆதி. அழகர்சாமி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மதிவாணன், கார்த்தி மற்றும் நிர்வாகிகள் தமிழரசன், மலைமேகு, ஒன்றிய துணைச் செயலாளர்கள் சிவபுரி சேகர், எஸ். முத்துக்குமார், எஸ்.ஆர்.பி.ரமேஷ், ஒய்.கா.சோமு, குரு.மனோகரன், உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக வாளுக்கு வேலி நினைவிடத்திற்கு வருகை தந்த கேஆர்.பெரியகருப்பனை வாரிசு தாரர்கள் செல்வராஜ் கண்ணதாசன் வழக்கறிஞர் கலைமணி மற்றும் கிராம மக்கள் வரவேற்றார்கள்.

நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு கோவில்பட்டி அரசு மருத்துவ மனையில் பிறந்த குழந்தைகள் அனைவருக்கும் கோவில்பட்டி நகர தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பெ.கீதாஜீவன், கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கா.கருணாநிதி ஆகியோர் தங்க மோதிரம் அணிவித்தனர். உடன் கிழக்கு நகர கழக செயலாளர் மு.சுரேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.